தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 146 | 4 Pages | 24.12.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 146 | 4 பக்கங்கள் | 24.12.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை**

**விளக்கம்:** கிடைத்ததைப் பகுந்து கொடுத்துத் தானும்உண்டுபலஉயிர்களையும்காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

## செல்போன் டவர் கருவிகளை திருடிய கும்பல் கைது 8 மாநிலங்களில் கைவரிசை காட்டியது அம்பலம்

லக்னோ, டிச.24

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செல்போன் டவர் கருவிகளை திருடும்சம்பவங்கள்அரங்கேறிவருகின்றன. இந்ததிருட்டுசம்பவங்களை தடுக்க மாநில போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், செல்போன் டவர் கருவிகளை திருடும் கும்பலை சேர்ந்த 5 பேரை உத்தரபிரதேச போலீசார் இன்று கைது செய்தனர்.

இந்த கொள்ளை கும்பல் டெல்லி, உத்தரபிரதேசம், ராஜஸ்தான், அரியானா, மராட்டியம், பஞ்சாப், மத்தியபிரதேசம், அசாம் ஆகிய 8 மாநிலங்களில் செல்போன் டவர் கருவிகள் திருட்டில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட கொள்ளை கும்பலிடமிருந்து செல்போன் டவர் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## வயநாடு எம்.பி. பிரியங்கா காந்தியை தகுதிநீக்கம் செய்யக்கோரி கேரள ஐகோர்ட்டில் மனு




திருவனந்தபுரம், டிச.24

கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் நடந்த நாடாளுமன்ற இடைத்தேர்தலில், காங்கிரஸ் சார்பில் பிரியங்காகாந்தி போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்நிலையில், பா.ஜ.க.வை சேர்ந்த நவ்யா ஹரிதாஸ் என்பவர், வயநாடு எம்.பி. பிரியங்காகாந்திக்கு எதிராக கேரள ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், பிரியங்கா காந்தி தாக்கல் செய்த தேர்தல் பிரமாண பத்திரத்தில், அவருடைய சொத்துகள் குறித்தும், குடும்பத்தின் சொத்துகள் குறித்தும் தவறான தகவல்களை வழங்கி உள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். இது தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது என்றும், ஊழல் குற்றச்சாட்டுக்கு சமமானது என்றும் கூறியுள்ளார்.

எனவே பிரியங்கா காந்தியின் வெற்றியை ரத்து செய்து, அவரை எம்.பி. பதவியில் இருந்து தகுதிநீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும் என்று நவ்யா ஹரிதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். கேரள ஐகோர்ட்டிற்கு வரும் 23ந்தேதி(நாளை) முதல் ஜனவரி 5ந்தேதி வரை விடுமுறை நாட்கள் என்பதால், இந்த வழக்கு ஜனவரியில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குவைத்தில் 2 நாள் அரசு முறை பயணம் முடிந்து புதுடெல்லி புறப்பட்டார் பிரதமர் மோடி

புதுடெல்லி, டிச 24

பிரதமர் மோடி குவைத்திற்கு 2 நாள் அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதற்காக டெல்லியில் இருந்து தனி விமானத்தில் நேற்று புறப்பட்டு சென்ற அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவருடைய இந்த 2 நாள் பயணத்தில், இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்களை சந்தித்து உரையாடுவதுடன், இந்தியா மற்றும் குவைத் இடையே பல்வேறு பிரிவுகளில் நட்புறவை வலுப்படுத்தும் வகையில், குவைத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதேபோன்று, குவைத்தில், முன்னாள் ஐ.எப்.எஸ். அதிகாரியான 101 வயதுடைய மங்கள் செயின் ஹண்டாவை, பிரதமர் மோடி நேரில் சந்தித்து பேச இருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த சூழலில், குவைத் சென்றடைந்த பிரதமர் மோடியை, அந்நாட்டு விமான நிலையத்தில் துணை பிரதமர் மற்றும் பாதுகாப்பு மந்திரியான ஷேக் பகத் யூசப் சவுத் அல்சபா மற்றும் பலர் வரவேற்றனர்.

இதன்பின்னர், இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்களை சந்தித்து அவர் பேசினார். அப்போது அவர்கள் கைகளில் இந்திய தேசிய கொடியுடன் பிரதமரை வரவேற்றனர். அவர்கள் பிரதமருக்கு கரம் கூப்பி வணக்கம் தெரிவித்தனர். இந்த பயணத்தில், ராணுவம் மற்றும் பாதுகாப்பில் ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு, குவைத் நாட்டின் உயரிய குடிமக்களுக்கான விருது வழங்கப்பட்டது. குவைத்தின் அமீர், ஷேக் மெஷல் அல்அகமது அல்ஜாபர் அல் சபா, பிரதமர் மோடிக்கு விருது வழங்கி கவுரவம் அளித்துள்ளார்.

தி ஆர்டர் ஆப் முபாரக் அல் கபீர் என்ற இந்த விருது நாடுகளின் தலைவர்கள், வெளிநாட்டு ஆட்சியாளர்கள் மற்றும் வெளிநாட்டு அரச குடும்பத்தினர் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது. இதன்பின்னர், ஷேக் மெஷல் அல் அகமது அல்ஜாபர் அல் சபாவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையிலும் பிரதமர் மோடி ஈடுபட்டார்.

இதுபற்றி மத்திய வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடக பதிவில், குவைத்தின் பாயன் அரண்மனையில் குவைத்தின் அமீர், ஷேக் மெஷல் அல்அகமது அல் ஜாபர் அல் சபாவை பிரதமர் மோடி சந்தித்து உள்ளார். முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை முன்னெடுத்து செல்லப்பட்டு உள்ளது. இந்தியா மற்றும் குவைத் இடையேயான உறவுகள், மூலோபாய நட்புறவுக்கு உயர்த்தப்பட்டு உள்ளது. இருநாட்டு இருதரப்பு உறவுகளை புதிய உச்சத்திற்கு எடுத்து செல்வதற்காக அதுபற்றி அறிந்து கொள்வதற்கான வழிகளைப்பற்றிய ஆலோசனைகளில் கவனம் செலுத்தப்பட்டன. குவைத்தில் இந்திய சமூகத்தினர் நலமுடன் இருப்பதற்காக, அமீருக்கு தன்னுடைய நன்றியை பிரதமர் மோடி தெரிவித்து கொண்டார் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில், குவைத் நாட்டுக்கான 2 நாள் அரசு முறை பயணம் முடிந்து பிரதமர் மோடி சொந்த நாட்டுக்கு புறப்பட்டார். அவருடைய இந்த பயணத்தின்போது, மருந்து, தகவல் தொழில் நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய பிரிவுகளில் ஒத்துழைப்புடன் செயல்படுவது பற்றி குவைத்தின் அமீருடன் ஆலோசனை மேற்கொண்டார். யோகாவை ஊக்குவித்து வரும் சமூக ஊடக பிரபலங்களையும் அவர் சந்தித்து உரையாடினார். இதில், சிறப்பு நடவடிக்கையாக இந்தியாவுக்கு புறப்பட்ட பிரதமர் மோடியை காண விமான நிலையத்திற்கு வந்த குவைத் பிரதமர், பின்னர் அவரை வழியனுப்பினார். கடந்த 1981ம் ஆண்டு கடைசியாக மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி குவைத்துக்கு பயணம் மேற்கொண்டார். அவருக்கு அடுத்து பிரதமர் மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டார்

# 7வது முறையாக ஆட்சி அமைப்பதே நமது இலக்கு: தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, டிச.24

சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று காலை தொடங்கி நடைபெற்று வருகிறது. இதற்கு முதல்அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில் கட்சியின் மூத்த நிர்வாகிகள், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், மாவட்டச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், அணி நிர்வாகிகள் என 850க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர். இந்த கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




இந்நிலையில் தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் உரையாற்றிய முதல்அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின், "ஏழாவது முறையாக தி.மு.க. ஆட்சி அமைக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய இலக்கு. 2026 சட்டசபைத் தேர்தலில் 200 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி வெல்லும் . 2026ல் வெற்றி நமதே. 2026 தேர்தல் பணிகளை முழுவீச்சில் களத்தில் மேற்கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

# மாதவரம் கைலாசநாதர் கோவில் திருப்பணி அமைச்சர் நேரில் கள ஆய்வு



சென்னை, டிச.24

சென்னை மாதவரம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் திருக்குளத் திருப்பணியை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆய்வு செய்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு சென்னை, மாதவரம், மாரியம்மன் திருக்கோவிலை புதிய கருங்கல் கட்டுமான திருக்கோவிலாக கட்டுவது குறித்தும், வேணுகோபால் நகர், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருக்குள திருப்பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

'தமிழ்நாடு முதல்அமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வேண்டிய குடமுழுக்குகளை முறையாக நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு இது வரை 2,363 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அந்த வகையில் இன்றைய தினம் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோவிலான மாதவரம் அருள்மிகு மாரியம்மன் திருகோவிலுக்கு புதிதாக கருங்கல் கட்டுமானத்தில் கோவில் கட்ட வேண்டும் என்று ஊர்மக்கள் ஒன்று கூடி எடுத்த முடிவின்படி மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று ஆய்வு மேற்கொண்டோம்.

இத்திருக்கோவில் கருங்கல் கட்டுமானத்திற்கு ரூ.1.50 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டு, மாநில வல்லுனர் குழு மற்றும் தொல்லியல் குழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் ரூ.50 லட்சம் உபயதாரர் நிதியாக பெற்றுத் தருவதாகவும் மீதமுள்ள தொகை இந்து சமய அறநிலைத் துறை சார்பில் வழங்கிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். மக்கள் கேட்டதெல்லாம் செய்து தருகின்ற திராவிட மாடல் அரசு எஞ்சியுள்ள ரூ.1 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை துறையின் மூலம் செய்து கொடுக்கும். இத்திருப்பணி 2026 ஜனவரி மாதத்திற்குள் முடிக்க ப்பட்டு குடமுழுக்கு நடத்திட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல் மாதவரம் அருள்மிகு கற்பகாம்பாள் சமேத கைலாசநாதர் திருக்கோவில் திருக்குளத் திருப்பணி ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அப்பணிகளை இன்றைய தினம் ஆய்வு செய்கின்ற போது இப்பணிக்கு கூடுதல் நிதி தேவை என சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார். அதனையும் ஏற்று கூடுதல் நிதியை வழங்கி வருகின்ற 2025 மே மாதத்திற்குள் நிறைவு செய்து பக்தர்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும்.

நீர் ஆதாரங்கள் பாதுகாக்கவும், நிலத்தடி நீர் உயர்த்திடவும், பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்த பயன்படுத்துகின்ற வகையிலும் திருக்குளங்கள் சீரமைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ரூ.3 கோடி மதிப்பீட்டில் 4 புதிய குளங்கள் அமைக்கவும், 220 திருக்குளங்கள் ரூ.120.33 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கின்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் திருத்தேர் பாதுகாப்பு கொட்டகைகள், அன்னதான கூடங்கள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், முடி காணிக்கை மண்டபம் என அனைத்திலும் தனி கவனம் செலுத்தி பக்தர்களின் அடிப்படை வசதிகளை மேற்கொள்கின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது.

திருக்கோவில்களுக்கு வருவாய் ஈட்டுகின்ற வகையில் அங்கு பயன்பாட்டிலில் இல்லாத பலமாற்றுப் பொன் இனங்கள் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் முன்னிலையில் பிரித்தெடுக்கப்பட்டு ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி பாரத ஸ்டேட் வங்கியில் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை 23 திருக்கோவில்களில் பிரித்து பிரித்தெடுக்கப்பட்ட பலமாற்றுப் பொன் இனங்களில் 13 திருக்கோவில்களில் பொன் இனங்கள் உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வாரம் ஆனைமலை, பழனி, குணசீலம் ஆகிய திருக்கோவில்களின் பலமாற்றுப் பொன் இனங்கள் மும்பைக்கு அனுப்பப்பட்டுள்ளன. வரும் 27ந்தேதி சமயபுரம் திருக்கோவிலின் சுமார் 526 கிலோ பலமாற்றுப் பொன் இனங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

திருக்கோவில்களின் உண்டியல்களில் எந்த பொருள் விழுந்தாலும் அதனை சுவாமியின் கணக்கில்தான் வரவு வைப்பார்கள். இதற்கு ஏதாவது விதிவிலக்கு இருக்கிறதா என்று சட்டப்படி ஆராய்ந்து, அப்படி இருப்பின் அதற்கேற்ற நிவாரணம் வழங்குவதற்குண்டான சாத்திய கூறுகள் இருப்பின் அதுகுறித்து துறை அலுவலர்களுடன் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்.'

இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் ரா.சுகுமார், இணை ஆணையர் கி.ரேணுகாதேவி, உதவி ஆணையர் க.சிவக்குமார், திருக்கோவில் செயல் அலுவலர்கள் எஸ்.நித்யகலா, பி.சண்முகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் நடப்பது மக்களைக் காக்கும் அரசா? அன்புமணி ராமதாஸ் கேள்வி



சென்னை, டிச.24

பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை சைதாப்பேட்டை சின்னமலையைச் சேர்ந்த ஆகாஷ் என்ற இளைஞர் ஆன்லைன் ரம்மியில் பெரும் பணத்தை இழந்ததால் ஏற்பட்ட மன உளைச்சலைத் தாங்க முடியாமல் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். ஆகாஷை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகாஷ் பல மாதங்களாகவே ஆன்லைன் ரம்மிக்கு அடிமையாகி இருந்தார். அவருக்கு வேலை கிடைக்காத நிலையில், ஆன்லைன் ரம்மி ஆடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். தொடக்கத்தில் அதன் மூலம் பணம் கிடைத்த நிலையில், மேலும் மேலும் பணம் ஈட்ட வேண்டும் என்ற ஆசையில் ஆன்லைன் ரம்மி விளையாடி தம்மிடம் இருந்த பணத்தையும், கடன் வாங்கிய பணத்தையும் தொலைத்துள்ளார்.

கடைசியாக தமது தாயாரின் மருத்துவச் செலவுக்காக வைத்திருந்த ரூ.30 ஆயிரம் பணத்தையும் எடுத்து ஆன்லைன் ரம்மி ஆடி இழந்துள்ளார். ஆன்லைன் ரம்மிக்கு அடிமையானவர்கள் என்னவெல்லாம் செய்வார்கள் என்பதற்கு ஆகாஷ்தான் மோசமான எடுத்துக்காட்டு ஆவார். பாமக நடத்திய தொடர் போராட்டங்களின் காரணமாக ஆன்லைன் சூதாட்டம் இரு முறை தடை செய்யப்பட்டது. ஆனாலும், அந்தத் தடையை நீதிமன்றத்தில் நியாயப்படுத்த தமிழக அரசு தவறி விட்டதன் காரணமாகவே ஆன்லைன் சூதாட்டம் லட்சக்கணக்கான குடும்பங்களை மீள முடியாத கடன் வலையில் சிக்க வைத்திருக்கிறது.

தமிழக அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்டத் தடை சட்டம் ரம்மி, போக்கர் போன்ற விளையாட்டுகளுக்கு பொருந்தாது என்று கடந்த ஆண்டு நவம்பர் 10 ஆம் நாள் சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பளித்ததற்குப் பிறகு கடந்த ஓராண்டில் மொத்தம் 16 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆகாஷ் ஆன்லைன் ரம்மிக்கு பலியான 17ம் நபர் ஆவார்.

ஆன்லைன் சூதாட்ட தற்கொலைகளுக்கு முடிவு கட்டுவதற்கான ஒரே வழி சென்னை ஐகோர்ட்டு தீர்ப்புக்கு சுப்ரீம் கோர்ட்டில் தடை பெறுவது தான். ஆனால், தீர்ப்பளிக்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசால் தடை பெற முடியவில்லை. தமிழ்நாட்டு மக்களை பலி கொண்டு வரும் ஆன்லைன் ரம்மி சூதாட்டத்திற்கு தடை கோரும் மனுவை மட்டும் ஓராண்டுக்கும் மேலாக விசாரணைக்கு கொண்டு வர முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆன்லைன் சூதாட்டத்திற்கு அடிமையாகி பணத்தை இழந்து பல குடும்பங்கள் வீதிக்கு வருவதைத் தடுப்பதும், தற்கொலை செய்து கொள்வதைத் தடுப்பதும் தான் அரசின் பணியாக இருக்க வேண்டும். ஆனால், அதை செய்ய தமிழக அரசு தவறுவதைப் பார்க்கும் போது, ஆன்லைன் ரம்மி நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்படுவதைப் போலத் தான் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் நடப்பது மக்களைக் காக்கும் அரசா, ஆன்லைன் ரம்மி நிறுவனங்களை வளர்க்கும் அரசா? என்பதே தெரியவில்லை.

தமிழக அரசின் அலட்சியம் காரணமாக, ஆன்லைன் சூதாட்டத்தில் பணத்தை இழந்த 17 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில், இன்னும் எத்தனை உயிர்கள் பலியாவதை தமிழக அரசு வேடிக்கைப் பார்க்கப் போகிறது? தமிழ்நாடு அரசு இந்த விவகாரத்தில் இனியும் உறங்கிக் கொண்டிருக்காமல் சுப்ரீம் கோர்ட்டில் ஆன்லைன் சூதாட்டத் தடை தொடர்பான வழக்கை விரைவாக விசாரணைக்கு கொண்டு வந்து ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை: நான்கு வழிச்சாலையில் விபத்து பைக்கில் சென்ற தொழிலாளி உயிரிழப்பு

நெல்லை, டிச.24

நெல்லை மாவட்டம் தருவை அருகே உள்ள அடைமிதிப்பான்குளம் பகுதியை சேர்ந்தவர் ராஜ செல்வன். கூலித்தொழிலாளியான இவர் வேலை நிமித்தமாக நெல்லை மூன்றடைப்பு பகுதிக்கு சென்றுவிட்டு தனது பைக்கில் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்.



அங்குள்ள நான்கு வழிச்சாலையை அவர் கடக்க முயன்றபோது நாகர்கோவிலில் இருந்து நெல்லை நோக்கி வந்த கார் ஒன்று எதிர்பாராத விதமாக பைக் மீது மோதியது. இந்த விபத்தில் பைக்கில் இருந்து தூக்கி வீசப்பட்ட ராஜசெல்வன், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதோடு விபத்தில் சிக்கிய பைக், சிறிது நேரத்தில் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

இந்த விபத்து காரணமாக நான்கு வழிச்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மூன்றடைப்பு போலீசார், உயிரிழந்த ராஜசெல்வனின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். தொடர்ந்து கார் டிரைவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 30ம் தேதி பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட்டை விண்ணில் ஏவ இஸ்ரோ முடிவு



சென்னை, டிச.24

பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட்டை வரும் 30ம் தேதி விண்ணில் ஏவ இஸ்ரோ முடிவு செய்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி எஸ்.டி.எக்ஸ்.1, எஸ்.டி.எக்ஸ்.2 என தலா 220 கிலோ எடை கொண்ட 2 சிறிய செயற்கைக்கோள்களை இந்த ராக்கெட் சுமந்து செல்கிறது.

முன்னதாக தனது கனவு திட்டமான மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ தீவிரமாக பணியாற்றி வருகிறது. அதன்படி வருகிற 2035ம் ஆண்டுக்குள் விண்வெளியில் இந்திய ஆய்வு மையத்தையும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான முன் தயாரிப்பு திட்டமாக ஸ்பேஸ்எக்ஸ் எனும் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தில் ஸ்பேஸ் டாக்கிங் எனப்படும் விண்வெளியில் விண்கலன்களை ஒருங்கிணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த சூழலில் ஸ்பேஸ் எக்ஸ் திட்டத்துக்காக, பி.எஸ்.எல்.வி., சி 60 ராக்கெட், ஸ்ரீஹரிக்கோட்டா ஏவுதளத்தில் தயார் நிலையில் நேர் நிறுத்தப்பட்டுள்ளது. இது நிலவை ஆய்வு செய்யவும், ஆய்வு மாதிரிகளுடன் பூமிக்கு திரும்ப வரவும், விண்வெளி ஆய்வு நிலையம் அமைக்கவும், இந்த தொழில்நுட்ப பரிசோதனை உதவும் என்று கூறப்படுகிறது.

தனித்தனியான இரு விண்கலன்களை, விண்வெளியில் சென்று இணையச செய்வதற்காக இந்த சோதனை வெற்றி பெற்றால், இதை சாதித்த நான்காம் நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைக்கும்.

இது தொடர்பாக இஸ்ரோ தனது எக்ஸ் வலைதளத்தில், "ராக்கெட் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு முதலாவது ஏவுதளத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை ஐ.ஐ.டி.யில் 3ந்தேதி தொழில்நுட்ப திருவிழா: பொதுமக்கள் பங்கேற்க அனுமதி

சென்னை, டிச.24

சுமார் 65 ஆண்டுகளாக சர்வதேச அளவில் புகழ்பெற்று விளங்கும் உயர் அறிவியல் பொறியியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனமான சென்னை ஐ.ஐ.டி. கல்லூரியில், பல்வேறு ஆராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்திய மாணவர்கள் மட்டுமின்றி, சுமார் 18 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், 600க்கும் மேற்பட்ட பேராசியர்களுடன் சென்னைஐ.ஐ.டி.இயங்கி வருகிறது.




சென்னை ஐ.ஐ.டி.யில் ஒவ்வொரு ஆண்டும் 'சாஸ்திரா' என்ற பெயரில் தொழில்நுட்ப திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. மாணவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகள், செயல்திட்டங்கள் ஆகியவற்றை காட்சிப்படுத்தி, மற்ற உயர்கல்வி மாணவர்களுக்கும், தொழில்துறையினருக்கும் தங்கள் திறமையை எடுத்துக்காட்டும் விதமாக இந்த தொழில்நுட்ப திருவிழா கொண்டாடப்படுகிறது.

அந்த வகையில் வரும் ஜனவரி 3ந்தேதி முதல் 7ந்தேதி வரை சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தில் தொழில்நுட்ப திருவிழா நடைபெற உள்ளது. இந்த தொழில்நுட்ப திருவிழாவிற்கு சுமார் 60 ஆயிரம் மாணவர்கள் நேரில் வருகை தருவார்கள் என்றும், இணையதளம் வழியாக சுமார் 10 லட்சம் பேர் இதனை பார்வையிடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தொழில்நுட்ப திருவிழாவில் பொதுமக்களும் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில்பங்கேற்கவிரும்பும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள், வரும் 25ந்தேதிக்குள் இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் கேரளாவுக்கே எடுத்துச் செல்லப்படும் மருத்துவக் கழிவுகள்

நெல்லை, டிச.24

கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ கழிவுகளை மூட்டை மூட்டையாக லாரிகளில் கொண்டு வந்து நெல்லை அருகே நடுக்கல்லூர், கொண்டாநகரம், சுத்தமல்லி உள்ளிட்ட பகுதிகளில் கொட்டிச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக சுத்தமல்லி போலீசாருக்கு புகார்கள் வந்தன.



இந்த பிரச்சினை பூதாகரமாக வெடித்ததை தொடர்ந்து சுத்தமல்லி போலீசார் 6 வழக்குகளை பதிவு செய்துள்ளனர். ஏற்கனவே நெல்லையைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், கழிவுகளை கொண்டு வந்து கொட்டிய லாரியின் உரிமையாளர் மற்றும் கேரளாவைச் சேர்ந்த தனியார் கழிவு மேலாண்மை நிறுவனத்தின் சூப்பர்வைசர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே பசுமை தீர்ப்பாயம், மருத்துவ கழிவுகளை கேரள மாநில அரசே அப்புறப்படுத்த உத்தரவிட்டது. இதையடுத்து கேரளா மாநில மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு நடத்தி உள்ளனர்.

இந்நிலையில் நெல்லை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கொட்டப்பட்ட கேரள மருத்துவக் கழிவுகள் மீண்டும் கேரளாவுக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளன. கழிவுகளை அகற்றும் பணி சற்று நேரத்தில் தொடங்கும் நிலையில், திருவனந்தபுரத்தில் இருந்து 8 லாரிகள் வந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கொட்டப்பட்ட மருத்துவ கழிவுகளை அகற்றுவதற்காக உதவி கலெக்டர் ஆல்பர்ட் தலைமையில் கேரளாவில் இருந்து குழுவினர் இன்று நெல்லை வருகிறார்கள். அவர்கள் இங்கு தங்கியிருந்து மருத்துவ கழிவுகளை அகற்றுவார்கள் என்று கூறப்படுகிறது.

# நெல்லை மருத்துவக்கழிவு விவகாரம்: மேலும் இருவர் கைது

நெல்லை, டிச.24

நெல்லை அருகே நடுக்கல்லூர், கோடகநல்லூர், கொண்டாநகரம் ஆகிய இடங்களில் கடந்த சில நாட்களுக்கு முன் கேரள மாநில மருத்துவக் கழிவுகள்மூட்டை மூட்டையாக கொட்டப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் கேரள அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். அதனை தொடர்ந்து கேரள மாநில மருத்துவ கழிவுகளை அகற்றுவதற்கு மாவட்ட நிர்வாகம் தீவிர நடவடிக்கையில் இறங்கியது.

அதன்படி நடுக்கல்லூர் உள்ளிட்ட 4 இடங்களிலும் சேகரிக்கப்பட்ட மருத்துவக் கழிவுகள் திருவனந்தபுரம் மண்டல புற்றுநோய் மையம் மற்றும் கிரெடன்ஸ் தனியார் மருத்துவமனை கழிவுகள் தான் என்பதை உறுதிப்படுத்துவதற்கான மருந்து குப்பிகள், சிரிஞ்சுகள், ரத்த சாம்பிள்கள், ஆவணங்களை நெல்லை மாவட்ட அதிகாரிகள் சேகரித்து பசுமை தீர்ப்பாயத்திடம் ஒப்படைத்தனர்.

அதன்படி, நெல்லை அருகே கொட்டப்பட்ட மருத்துவக் கழிவுகளை கேரள மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் 3 நாட்களுக்குள் அகற்ற வேண்டும் என தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இதையடுத்து பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி நேற்று கேரள குழுவினர் வந்து ஆய்வு செய்தனர். பசுமைதீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி மருத்துவக் கழிவுகளை அகற்ற கேரள அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறினர்.

மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்ட விவகாரத்தில் ஏற்கெனவே 2 பேர் கைதுசெய்யப்பட்டு உள்ளனர். பணம் வாங்கிக் கொண்டு கழிவுகளை கொட்டியதாக சுத்தமல்லியை சேர்ந்த மனோகர் மற்றும் மாயாண்டி ஆகியோரை போலீசார் கைது செய்துள்ளனர். கழிவு கொட்டப்பட்ட விவகாரத்தில் மனோகர் தலைமை ஏஜென்ட்டாக செயல்பட்டது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 2 ஏஜெண்டுகள் கைதான நிலையில், கேரள ஏஜெண்டுகளை போலீசார் வலை வீசி தேடி வந்தனர். இந்த நிலையில், திருவனந்தபுரத்தைச் சேர்ந்த 'கழிவுகள் அகற்றும் நிறுவனத்தின்' மேற்பார்வையாளர் சிபின் ஜார்ஜ் மற்றும் சேலம் ஓமலூரரைச் சேர்ந்த லாரி உரிமையாளர் செல்லதுரை ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தீபமலை உச்சியில் 10வது நாளாக காட்சியளிக்கும் மகா தீபம்

திருவண்ணாமலை, டிச.24

திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இக்கோவிலில் நடைபெறும் முக்கிய விழாக்களில் ஒன்றான கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 4ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.


திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான மகா தீபம் கடந்த 13ம் தேதி கோவிலின் பின்புறம் உள்ள 2,668 அடி உயர மலையின் உச்சியில் ஏற்றப்பட்டது. இதில் பல்வேறு மாவட்டங்கள், பிறமாநிலங்கள், வெளிநாடுகளை சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். மேலும் மகாதீபம் தொடர்ந்து 11 நாட்கள் பக்தர்களுக்கு காட்சி அளிக்கும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி 2,668 அடி உயரம் கொண்ட மலை உச்சியில் ஏற்றப்பட்ட மகா தீபம் பலத்த காற்றிலும் 10வது நாளாக சுடர் விட்டு எரிந்து வருகிறது. இதனை பக்தர்கள் பக்தி பரவசத்துடன் பார்த்து தரிசனம் செய்து வருகின்றனர்.

# கிறிஸ்துமஸ், அரையாண்டு விடுமுறை: விமான கட்டணம் கிடுகிடு உயர்வு

சென்னை, டிச.24

வருகிற 25ந்தேதி கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது, அத்துடன், அரையாண்டு விடுமுறை மற்றும், ஆங்கில புத்தாண்டு என தொடர் விடுமுறை வர உள்ளது. இதனால் சென்னையில் வசிக்கும் தென் மாவட்ட மக்கள் உள்ளிட்ட வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்கள், தங்களுடைய சொந்த ஊர்களுக்கும், சுற்றுலா தளங்களுக்கும் புறப்பட்டு செல்ல தயாராகி வருகின்றனர்.

தென் மாவட்டங்களுக்கு செல்லும் பெரும்பாலான ரெயில்களில் டிக்கெட் முன்பதிவு ஏற்கனவே முடிந்து விட்டது. மேலும், தனியார் ஆம்னி பஸ்களில் டிக்கெட் கட்டணம் பல மடங்கு அதிகமாக இருக்கிறது. இதனால் தென் மாவட்ட மக்கள் செல்லக் கூடிய தூத்துக்குடி, மதுரை மற்றும் திருவனந்தபுரம், கொச்சி விமானங்களில் பயணிகள் கூட்டம் அலை மோதுகிறது.



இந்த நிலையில், தொடர் விடுமுறை எதிரொலியாக, விமானத்தில் பயணம் செய்வதற்காக புக்கிங் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், விமான டிக்கெட் கட்டணங்களும் 3ல் இருந்து 4 மடங்கு வரை கிடுகிடுவென உயர்ந்துள்ளன.

அதன்படி சென்னைதூத்துக்குடிக்கு வழக்கமாக ரூ.4,796 ஆக இருந்த விமான கட்டணம் தற்போது ரூ.14,281 ஆகவும், சென்னை மதுரைக்கு வழக்கமாக இருந்த ரூ.4,300 கட்டணம் ரூ.17,695 ஆகவும், சென்னை திருச்சி வழக்கமாக ரூ.2,382 ஆக இருந்த கட்டணம் ரூ.14,387 ஆகவும் உயர்ந்துள்ளது.


அதேபோல, சென்னை கோவை வழக்கமாக இருந்த ரூ.3,485 கட்டணம் ரூ.9,418 ஆகவும், சென்னை சேலம் வழக்கமாக இருந்த ரூ.3,537 கட்டணம் ரூ.8,007 ஆகவும், சென்னை திருவனந்தபுரத்துக்கு ரூ.3,821 ஆக இருந்த கட்டணம் ரூ.13,306 ஆகவும், சென்னை கொச்சி இடையே வழக்கமாக இருந்த ரூ.3,678 கட்டணம் ரூ.18,377 ஆகவும், சென்னைமைசூரு வழக்கமாக இருந்த ரூ.3,432 கட்டணம் ரூ.9,872 ஆகவும் உயர்ந்துள்ளது. அதே போல, சென்னையில் இருந்து வெளிநாடு செல்லும் விமானங்களின் கட்டணமும் பல மடங்கு உயர்ந்துள்ளது.

விமானங்களில் குறைந்த கட்டணத்தில் இருந்த டிக்கெட்டுகள் ஏற்கனவே நிரம்பி விட்டன. இறுதியாக உள்ள டிக்கெட்டுகள் அதிகமாகத்தான் இருக்கும். இவை வழக்கமானதுதான். டிக்கெட் கட்டணம் உயர்வு என கூற முடியாது என அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், கடைசி நேரத்தில் புக்கிங் செய்யும்போது கட்டணம் பல மடங்கு அதிகரித்துள்ளதால், பயணிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அத்துடன், விடுமுறைக்கு செந்த ஊர் செல்ல வேண்டும் என்பதற்காக அதிக கட்டணம் இருந்தாலும், பயணிகள் புக்கிங் செய்து வருகின்றனர்.

# கடலூர் அருகே விபத்தில் சிக்கிய ஆம்னி பஸ்: ஒருவர் பலி

கடலூர், டிச.24

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அடுத்த ராம்நத்தம் பகுதியில் ஆம்னி பஸ் கவிழ்ந்த விபத்தில் சிக்கி ஒருவர் பலியானார்.



சென்னையில் இருந்து கன்னியாகுமரி நோக்கி 54 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த ஆம்னி பஸ், திருச்சி நெடுஞ்சாலையில்சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து தடுப்பு சுவரில் மோதி கவிழ்ந்து விபத்துள்ளானது. விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலே ஒருவர் உயிரிழந்தநிலையில் 30க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த இடத்தில் தற்போது மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த விபத்து சம்பவம் காரணமாக திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

# தேனி: காரில் கஞ்சா கடத்திய 3 பேர் கைது

தேனி, டிச.24

தேனிமாவட்டம்காவல் துறை கண்காணிப்பாளரின் கீழ் செயல்படும் போதை தடுப்பு சிறப்புக் காவல்துறையினருக்கு வந்த ரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று(21.12.2024) பிற்பகல் 3 மணி அளவில் பெரியகுளம் அருகே உள்ள கெங்குவார்பட்டி பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். ரோந்து பணியின் போது வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது, வாகனத்தில் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வாகனத்தில் வந்த உத்தமபாளையத்தைச்சேர்ந்த பிரதீபன் (24), சந்திரன் (50), சசிகுமார் (30) ஆகிய மூவரையும் கைது செய்ததோடு வாகனத்தில் கடத்தி வரப்பட்ட 21 கிலோ கஞ்சா மற்றும் காரையும் பறிமுதல் செய்த போதை தடுப்பு சிறப்புக் காவல் படையினர் தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தேவதானப்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதில் 'மூவரும் ஆந்திர மாநிலம் சிலுக்கனூர் பேட்டையில் உள்ளவரிடம் 21 கிலோ கஞ்சாவை வாங்கி ஆந்திராவிலிருந்து பேருந்து மற்றும் ரெயில் மூலமாகத் திருச்சி வரை கடத்தி வந்ததாக தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து போலீசார் 3பேர் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்திற்குஅழைத்து சென்றனர். பின்னர் அவர்கள் 3 பேரையும் சிறையில் அடைத்தனர்.

# மதுரை மெட்ரோ பணிகள் இன்னும் 6 மாதத்தில் தொடங்க வாய்ப்பு

மதுரை, டிச. 24

மதுரையில் ரூ.11 ஆயிரத்து 340 கோடியில் மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இந்தநிலையில், அதற்கான பூர்வாங்க பணிகள் குறித்து, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் மெட்ரோ ரெயில் திட்ட இயக்குனர் அர்ஜூனன் தலைமையில் சிறப்பு குழுவினர் மதுரையில் ஆய்வு மேற்கொண்டனர். அந்த குழுவினர் மதுரை ரெயில் நிலைய பகுதியில் தொடங்கி ஆண்டாள்புரம் வரை, மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்துவதற்கு சிக்கல் நிறைந்த இடங்களில் ஆய்வு செய்தனர். இதைத்தொடர்ந்து மதுரை மெட்ரோ திட்டப்பணிகள் இன்னும் 6 மாதத்தில் தொடங்க வாய்ப்பு உள்ளது என்றும், வைகை ஆற்றின் கீழ் பகுதியில் மெட்ரோ ரெயிலில் செல்லும்போது வியப்பாக இருக்கும் எனவும் திட்ட இயக்குனர் அர்ஜூனன் கூறினார்.

# சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த முதியவருக்கு 10 ஆண்டு சிறை

திருச்சி, டிச.24

திருச்சியை அடுத்த திருவெறும்பூர் குட்செட் சாலையை சேர்ந்தவர் பழனிவேல் (வயது 70). கூலி தொழிலாளியான இவர், திருச்சியை சேர்ந்த தலா 8 வயதுடைய 2 சிறுமிகளுக்கு அவ்வப்போது தின்பண்டங்கள் வாங்கி கொடுத்துள்ளார். இந்நிலையில், கடந்த 2021ம் ஆண்டு அந்த சிறுமிகளுக்குதின்பண்டங்கள் வாங்கி கொடுத்து மறைவான இடத்துக்கு அழைத்து சென்று பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார். இதில் பயந்துபோன சிறுமிகள், நடந்த சம்பவத்தை யாரிடமும் கூறாமல் இருந்தனர். இதனால் மனஅழுத்தத்திற்கு ஆளான சிறுமிகள், தன் வயதுடைய சிறுவன் ஒருவனிடம் தங்களுக்கு நேர்ந்த கொடுமை குறித்து அச்சத்துடன் கூறியுள்ளனர். இதை தொடர்ந்து, சிறுவன், அந்த சிறுமிகளின் பெற்றோரிடம் தெரிவித்துள்ளான்.

இதையடுத்து, 2 சிறுமிகளையும் அவர்களது பெற்றோர் அழைத்து விசாரித்தனர். அவர்களிடம் சிறுமிகள் நடந்தவற்றை அழுதபடி கூறினர். இது தொடர்பாக திருவெறும்பூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் சிறுமிகளின் பெற்றோர் புகார் அளித்தனர். அதன்பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிந்து பழனிவேலை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு திருச்சி மாவட்ட மகிளா கோர்ட்டில் நடந்து வந்தது. இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதில் பழனிவேலுக்கு 10 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.4 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. மேலும் 2 சிறுமிகளுக்கு நிவாரண தொகையாக தலா ரூ.1 லட்சம் வழங்கவும் அரசுக்கு மகிளா கோர்ட்டு மாவட்ட நீதிபதி ஸ்ரீவத்சன் உத்தரவிட்டார்.

# மின் விபத்தால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு வழங்கப்படும் இழப்பீடு ரூ.10 லட்சமாக உயர்வு

சென்னை, டிச.24

பொது இடங்களில் மின் விபத்துகளால் உயிரிழப்போரின் குடும்பத்தினருக்கு மின்சார வாரியம் வழங்கும் நிவாரணத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

முழு பார்வை பாதிப்பு, 2 கை, கால்களும் செயலிழந்தால் வழங்கப்படும் நிவாரணம் ரூ.3 லட்சமாகவும், ஒரு கை, கால் செயலிழப்புக்கு நிவாரணம் ரூ.1.50 லட்சமாகவும் உயர்த்தி மின்சார வாரியம் அரசாணை வெளியிட்டுள்ளது.

# உணவு படைக்கும் கடவுள்களை போராடத் தூண்டாதீர் ராமதாஸ் எச்சரிக்கை



சென்னை, டிச.24

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலையில் நேற்று உழவர் பேரியக்க மாநாடு பிரமாண்டாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநாட்டை நடத்தி முடித்த உழவர் பேரியக்க நிர்வாகிகளுக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பாட்டாளி மக்கள்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் முனைவர் கணேஷ்குமார், ஏந்தல் பக்தா, வேலாயுதம், பாண்டியன் ஆகியோருக்கும், அவர்களுக்கு துணை நின்ற தமிழ்நாடு மற்றும் புதுவை மாநிலங்களில் பா.ம.க மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், தமிழ்நாடு உழவர் பேரியக்கம் உள்ளிட்ட சார்பு அமைப்புகளின் நிர்வாகிகளுக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட உழவர் பேரியக்க மாநாடு என்பது கூடிக் கலைவதற்கான நிகழ்வு அல்ல. மாறாக, உழவர்களின் துயர் துடைப்பதற்கானமாநாடு. அந்த மாநாட்டில் உழவர்களின் கோரிக்கைகள் தீர்மானங்களாக வடிக்கப்பட்டு மொத்தம் 45 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவை தீர்மானங்கள் என்பதையும் தாண்டி உழவர்களின் குரல்கள்.

அவை அபயக்குரல்கள் அல்ல; உரிமைக்குரல்கள்.

அவை அனைத்தும் நிறைவேற்றப்படும் வரை பாட்டாளி மக்கள் கட்சியும், உழவர் பேரியக்கமும் ஓயப் போவதில்லை.

உழவர்களின் உரிமைகளைக் காப்பதற்காக அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி சென்னை போர் நினைவுச் சின்னம் அருகில் முற்றுகை போராட்டத்தை அடுத்த ஆண்டில் தமிழ்நாடு உழவர் பேரியக்கம் நடத்தும். தமிழ்நாடு முழுவதும் உள்ள உழவர்கள் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி டிராக்டர்கள், மாட்டு வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களில் தலைநகரை நோக்கி பேரணியாக வந்து போராட்டத்தில் பங்கேற்பார்கள். இதற்காக தேசிய, மாநில அளவிலான உழவர் அமைப்புகளின் ஆதரவு கோரப்படும். இந்தப் மாபெரும் போராட்டத்திற்கான தேதியை அடுத்த ஆண்டில் தமிழ்நாடு உழவர் பேரியக்கம் அறிவிக்கும்.

உலகில் உயர்ந்த சக்தி என்றால் அது உழவர் சக்தி தான். உணவு படைக்கும் கடவுள்களை போராடத் தூண்டாதீர். அதனால், தமிழ்நாடு உழவர் பேரியக்கத்தின் 10 கோரிக்கைகளையும் தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்; அதன் மூலம் தமிழ்நாடு உழவர் பேரியக்கம் நடத்தவிருக்கும் சென்னை முற்றுகைப் போராட்டத்தை தவிர்ப்பது தமிழக அரசின் கைகளில் தான் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மெரினா கலங்கரை விளக்கத்தில் சக்திவாய்ந்த புதிய ரேடார் கருவி பொருத்தம்



சென்னை, டிச.24

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கத்தில் சக்திவாய்ந்த ரேடார் கருவி, சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இந்த ரேடார் கருவி கலங்கரை விளக்கத்தின் 11வது மாடியில் பொருத்தப்பட்டுள்ளது. இந்த ரேடார் கருவி மூலம் 150 கிலோ மீட்டர் தொலைவில் வரும் கப்பல்கள் மற்றும் படகுகளை கூட துல்லியமாக கண்காணிக்க முடியும் என கூறப்படுகிறது.

இந்த ரேடார் கடலோர பாதுகாப்பு படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ரேடாரின் ஸ்கேன் விவரங்கள் மற்றும் புகைப்படங்களை, கலங்கரை விளக்க அதிகாரிகள் உடனுக்குடன் கடலோர காவல்படைக்கு அனுப்பி வருகின்றனர். மேலும் சென்னைக்கு வந்து செல்லும் கப்பல்கள், மீன்பிடி படகுகள் உள்ளிட்டவை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ரேடார் கருவி ஸ்கேன் செய்யும் பணிகளையும், அதில் உள்ள கேமரா புகைப்படம் எடுக்கும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இதில் வரும் கதிர்வீச்சு தாக்கம் காரணமாக 10வது மாடி வரை மட்டுமே பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. பெங்களூருவில் இருந்து புதிய ரேடார் கருவி கொண்டுவரப்பட்டு, 40 அடி உயரம் உள்ள கலங்கரை விளக்கத்தில் 60 அடி உயரம் கொண்ட கிரேன் இந்திரம் மூலம் புதிய ரேடார் கருவி பொருத்தப் பட்டது.

# கருணாநிதி நூல்கள் நாட்டுடைமை: அரசாணையை ராஜாத்தி அம்மாளிடம் வழங்கினார் அமைச்சர் சாமிநாதன்



சென்னை, டிச.24

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 188 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 15.32 கோடி நூலுரிமைத் தொகை தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதில் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 139 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு 9.71 கோடி நூலுரிமைத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்பு நாளிதுவரை 31 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரியையர்களுக்கு ரூ.3.75 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 22.08.2024 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத்தொகையின்றி நாட்டுடைமை செய்யப்படும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இவ்வறிவிப்பிற்கிணங்க இலக்கிய இலக்கணப் படைப்புகளாகவும் ஆய்வாகவும் தமிழனைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதியின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் நாட்டுடைமையாக்கியதற்கான அரசாணையினை க. ராஜாத்தி அம்மாளிடம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இன்று அவரின் இல்லத்திற்கு நேரில் சென்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறையின் இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் உடனிருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விடுமுறை கொண்டாட்டம்: குற்றாலம் மெயின் அருவியில் நிரம்பி வழியும் கூட்டம்

குற்றாலம், டிச.24

தென்காசி மாவட்டத்தில் கடந்த டிசம்பர் 12ம் தேதி பெய்த தொடர்மழையின் காரணமாக குற்றாலம் மெயின்அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் அருவிக்கரைகள் சேதமடைந்தன. மேலும் வெள்ளம் காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து ஐந்தருவி, புலியருவியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. குற்றாலம் மெயின் அருவியில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையில், சுற்றுலா பயணிகள் அருவியின் ஓரமாக நின்று குளிக்க அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி தற்போது குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி, புலி அருவி, சிற்றருவி ஆகிய அருவிகளில் குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. தண்ணீரின் அளவு சீராக வந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) விடுமுறை தினத்தையொட்டி குற்றாலத்தில் உள்ள மெயின் அருவி மற்றும் ஐந்தருவி உள்ளிட்ட பகுதிகளில் அய்யப்ப பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் நிரம்பி வழிகிறது. கொளுத்தும் வெயிலில் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் மெயின் அருவியில் உற்சாகக் குளியல் போட்டு வருகின்றனர்.

# தி.மு.க. ஆட்சியில் தமிழகம் கடன்கார மாநிலமாக மாறியிருக்கிறது: அண்ணாமலை



சென்னை, டிச.24

தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகம் முழுவதும் உள்ள 385 மாவட்ட கல்வி அலுவலகங்களில் இணையதள இணைப்புக்கான கட்டணம், பல மாதங்களாகச் செலுத்தப்படாததால், இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. இணைய இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால், மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஆசிரியர்களின் சம்பளப் பட்டியல் தயாரிப்பதில் இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது.

தி.மு.க. ஆட்சியில், தமிழகம் கடன்கார மாநிலமாக மாறியிருக்கிறது. சுமார் 8.5 லட்சம் கோடி ரூபாய் வரை கடனில் இருக்கிறது. தமிழகம். வாங்கும் கடன் முழுவதும், அன்றாடச் செலவுகளுக்குத் தான் பயன்படுகிறதே தவிர, கடன் வாங்கும் உண்மையான நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்று, சி.ஏ.ஜி. தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

மாவட்டக்கல்வி அலுவலகங்களுக்கான இணைய தள இணைப்புக் கட்டணம் கூடச் செலுத்த முடியாமல், அன்றாடச் செலவுகளுக்கே கடன் வாங்கும் நிலையில் இருக்கிறதென்றால், உண்மையில், தி.மு.க. அரசு, தமிழக அரசின் நேரடி வரி வருமானத்தையும், ஜி.எஸ்.டி.யில் தமிழகத்தின் பங்காகக் கிடைக்கும் சுமார் 70 சதவீத நிதியையும் எந்த வகையில் செலவு செய்கிறது என்ற கேள்வி எழுகிறது. இந்த நிதி எல்லாம் எங்கே செல்கிறது..? திவால் ஆகும் நிலையில் இருக்கிறதா தமிழக அரசு..? முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆண்டுக்கு 100 நாட்கள் சட்டமன்ற கூட்டத்தை நடத்த வேண்டும் ஆர்.பி. உதயகுமார் பேச்சு



சென்னை, டிச.24

சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை தலைவர் ஆர். பி. உதயகுமார் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகத்தின் வளர்ச்சிக்காக, சட்டங்களை இயற்றி மக்களுக்கான திட்டங்களை கொடுத்து செயல்படுத்த வேண்டிய சட்டசபை கடந்த நான்காண்டு திராவிட முன்னேற்றக்கழக அரசு, மக்கள் பிரச்சனைகளை விவாதிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சிகளுக்கு போதிய நேரம் ஒதுக்கப்படுகிறதா? என்றால் மிகப் பெரிய அளவில் கேள்விக் குறியாகவே இருக்கிறது.

வருகிற 2025 ஆம் ஆண்டு முதல் கூட்டத்தொடர் கவர்னர் உரையோடு ஜனவரி 6ந்தேதி தொடங்க இருப்பதாக பேரவை தலைவர் அறிவித்திருக்கிறார். ஏற்கெனவே எடப்பாடியார் பேசும்போது, நேரலை துண்டிக்கப்பட்டு ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டு இருந்தார். நிதி அமைச்சர் கூட ரூ.26 ஆயிரம் கோடியை தமிழகத்திற்கு மத்திய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். வளர்ச்சி திட்டம் எதுவும் செய்யவில்லை என்பது கடந்த நான்கு ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் உண்மை நிலையாகும். மழைநீர், வெள்ளை நீருக்கு நிவாரணம் இல்லை, வறட்சிக்கு நிவாரணம் இல்லை, பயிருக்கு நிவாரணம் இல்லை, உயிரிழப்புக்கு நிவாரணம் இல்லை என்று எதையும் செய்யாத நிலையில் தான் தி.மு.க. அரசு உள்ளது. வரும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. 200 தொகுதியில் வெற்றி பெறும் என்று கூறுகிறார்கள். ஆனால் மக்கள் வாக்களிக்க தயாராக இல்லை. இந்த உண்மையை முதல்அமைச்சர் தெரிந்து கொள்ள வேண்டும். மக்கள்பிரச்சனையை பேசுகின்ற சட்டமன்றத்தில், மக்களுக்கு தேவையான சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றுவது தான் சட்டமன்றம். ஆனால் அங்கே என்ன நடைபெறுகிறது? எதிர்க்கட்சியினுடைய உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுகிறது.

கேள்வி நேரத்தில் கூட கேள்வி கேட்பதற்கு உரிமை மறுக்கப்படுகிறது. மக்களின் குறைகளை சட்டமன்றத்திலே எடுத்து வைத்தால் தானே, அது அமைச்சர்களுடைய கவனத்திற்கு சென்று அதற்கு தீர்வு கிடைக்கும். வருகின்ற ஜனவரி 6ந்தேதி இந்த ஆண்டுக்கான முதல் கூட்டத்தொடர் கவர்னர் உரையுடன் தொடங்குகிறது. அந்த கூட்டத்தொடரில் தி.மு.க. தேர்தல் வாக்குறுதியில் கூறியபடியே ஆண்டுக்கு 100 நாட்கள் சட்டமன்ற கூட்டத்தை நடத்துவோம் என்ற தேர்தல் வாக்குறுதியை செயல்படுத்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்வர வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வீட்டில் ஏற்பட்ட திடீர் பள்ளம் மெட்ரோ நிர்வாகம் அளித்த விளக்கம்



சென்னை, டிச.24

சென்னை தி.நகர் அருகே மெட்ரோ சுரங்க பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அங்கு மாம்பலம் பகுதியில் உள்ள வீடு ஒன்று, மெட்ரோ சுரங்க பணி அதிக அழுத்தம் காரணமாக குறிப்பிட்ட இடத்தில் உள்வாங்கியது. அப்போது வீட்டில் யாரும் இல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்நிலையில் சென்னை தி.நகரில் வீட்டின் தரைப்பகுதி உள்வாங்கிய சம்பவம் தொடர்பாக மெட்ரோ நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில், "மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் தொடர்ந்து செயல்படுகிறோம். கடினமான பாறை மற்றும் இலகுவான மண் போன்றவற்றால் இவ்வாறான சில நிகழ்வுகள் ஏற்படுகின்றன. இதனால் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. உள்வாங்கிய வீட்டின் பராமரிப்பு சீரமைப்பு பணிகளை முழுமையாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் மேற்கொள்ளும். வீடு பராமரிக்கும் வரை வீட்டின் உரிமையாளர், குடியேறும் வீட்டிற்கான வாடகை கட்டணம் செலுத்தப்படும். மெட்ரோ நிர்வாகம் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றன. முறையான சீரமைப்பு பணிகள் முடிவடைந்த உடனே அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் அங்கு குடியேற்றப்படுவார்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த பகுதியில் இருக்கும் மற்ற வீட்டார் அச்சப்பட தேவையில்லை. மண்ணின் தரம் குறித்து ஏற்கனவே பரிசோதனை மேற்கொண்டாலும் தொடர்ந்து பலமுறை ஆய்வுகளை நடத்தி வருவதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# அனைத்து கோர்ட்டுகளிலும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு: டி.ஜி.பி. உத்தரவு



சென்னை, டிச.24

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் மாவட்ட கோர்ட்டு உள்ளது. இந்த கோர்ட்டுக்கு தினமும் ஏராளமானோர் வழக்கு விசாரணைக்காக வந்து செல்கின்றனர். இந்தநிலையில், கீழநத்தம் பகுதியைச் சேர்ந்த மாயாண்டி என்பவர் ஒரு வழக்கு விசாரணையில் ஆஜராக அங்கு வந்துள்ளார்.

அப்போது கோர்ட்டு வளாகத்தில் நீதிபதி வருகைக்காக காத்திருந்த போது திடீரென 4 பேர் கொண்ட கும்பல் ஒன்று மாயாண்டியை சுற்றி வளைத்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக கும்பலிடம் இருந்து தப்பித்து கோர்ட்டு வளாகத்தில் ஓடினார். இருப்பினும் அந்த கும்பல் மாயாண்டியை துரத்தி சென்றது. கோர்ட்டு வளாகத்தில் இருந்து வெளியே வாசலுக்கு வந்தபோது மாயாண்டியை அந்த கும்பல் சரமாரியாக வெட்டியது. இதில் முகம், கை, கால் உள்ளிட்ட இடங்களில் பலத்த வெட்டுகாயம் ஏற்பட்டு ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே மாயாண்டி சரிந்து விழுந்து உயிரிழந்தார். இதையடுத்து அந்த கும்பல் காரில் ஏறி தப்பிச் சென்றது. அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மாயாண்டியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த சென்னை ஐகோர்ட்டு, நெல்லை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் போலீசார் பாதுகாப்பு பணியில் இருந்தும் கொலை நடந்துள்ளது. இதனை ஏன் காவல்துறை தடுக்கவில்லை? ஒரு குற்றம் நடைபெறும்பொழுது அதைதடுக்க முயல வேண்டுமே தவிர, குற்றம் நடந்த பிறகு குற்றவாளிகளை தேடுகிறோம் என்று சொல்வதில் என்ன நியாயம் உள்ளது' என்றார். அப்பொழுது அரசு தரப்பு வழக்கறிஞர், 'இந்த கொலை சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றவர்களை தேடி வருவதாகவும் தெரிவித்தார்.

அதற்கும் பல்வேறு கேள்விகளை நீதிபதிகள் முன்வைத்தனர். 'சம்பவ இடத்தில் இருந்த காவல் துறையினர் குற்றவாளிகள் தப்பி ஓடாமல் அவர்களை முட்டிக்கு கீழே காலில் சுட்டுப் பிடித்திருக்கலாம். இல்லையென்றால் அவர்கள் தப்பிச் செல்ல முயன்ற வாகனத்தின் டயர்களை சுட்டு நிறுத்தி இருக்கலாம். அப்படி செய்திருந்தால் சம்பவ இடத்திலேயே குற்றவாளிகளை அங்கேயே கைது செய்திருக்கலாம். தமிழகம் முழுவதும் மாவட்ட கோர்ட்டுகள் அனைத்திலும் காவல்துறையினர் பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோர்ட்டு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. அது கடைபிடிக்கப்பட வேண்டும். நாளை நீதிபதிக்கும் இதேபோன்ற ஒரு நிலை ஏற்பட்டால் நீங்கள் இப்படித்தான் வேடிக்கை பார்ப்பீர்களா?' என்று சரமாரியாக கேள்வி எழுப்பி இருந்தது.

இந்நிலையில் நெல்லை கோர்ட்டு அருகே இளைஞர் கொலை செய்யப்பட்ட சம்பவம் எதிரொலியாக அனைத்து கோர்ட்டுகளிலும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்க டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

கைத்துப்பாக்கி, நீண்ட தொலைவில் குறி வைத்து சுடும் துப்பாக்கிகளை வைத்திருக்கவும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து நாளைக்குள் அறிக்கை தாக்கல் செய்யவும் காவல் துறை அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தி உள்ளார்.

தினகனி



# நெல்லை அருகே ஆம்னி பஸ் டயர் வெடித்து விபத்து 5 பயணிகள் படுகாயம்

நெல்லை, டிச.24

சென்னையில் இருந்து கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை நோக்கி வந்து கொண்டிருந்த ஆம்னி பஸ் ஒன்று, நெல்லை மாவட்டம் வள்ளியூர்அருகேநான்குவழிச் சாலையில் வந்தபோது திடீரென அதன் டயர் வெடித்தது. இதில், கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையோரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.




அந்த பஸ்சில் சுமார் 45 பயணிகள் பயணம் செய்த நிலையில், அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். இந்த விபத்தில் படுகாயம் அடைந்த டிரைவர் உள்பட 5 பேர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தசம்பவம் குறித்து வள்ளியூர் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# த.வெ.க. தலைவர் விஜய் எனது தம்பி, எதிரியல்ல சீமான்



திருச்சி, டிச.24

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திருச்சியில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடும். அமைச்சர் செந்தில் பாலாஜியை பார்த்து எங்களுக்கு என்ன பயம்? அவர் என்ன ஆரியப்படைத் தலைவரா? பணம் கொடுத்தால்தான் தி.மு.க.வினர் வேலை செய்வார்கள். ஆயிரம் இருந்தாலும் நடிகர் விஜய் எனது தம்பி; அவர் எனது எதிரி அல்ல. தி.மு.க.தான் எனது எதிரி.

இஸ்லாமியர்கள் எனக்கு இதுவரை வாக்களித்தது இல்லை. இஸ்லாமியர்களின் 5 கடமைகளில் 6வது கடமையாக தி.மு.க.வுக்கு வாக்களிப்பதை வைத்துள்ளார்கள். இறைத்தூதரே வந்து சீமானுக்கு ஓட்டு போடுங்கள், தி.மு.க.வுக்கு போடாதீர்கள் என்று சொன்னால் கூட, இந்த மக்கள் நீங்கள் இறைத்தூதரே இல்லை என்றுதான் சொல்வார்கள். ஏனென்றால் நான் பா.ஜ.க.வின் பி டீமாம்; நான் பி டீம் என்றால் ஏ டீம் யாரு? தி.மு.க.தானே!

அ.தி.மு.க.வை கண்டு கூட தி.மு.க. பயப்படுவதில்லை. என்னை பார்த்து தான் பயப்படுகிறது. இது வரைஇருந்ததிலேயே மிக மோசமான முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தான். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக அரசின் நடவடிக்கைகளால் நெல்லையில் கழிவுகள் அகற்றம்: மாவட்ட கலெக்டர் பேட்டி

நெல்லை, டிச.24

கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ கழிவுகளை மூட்டை மூட்டையாக லாரிகளில் கொண்டு வந்து நெல்லை அருகே நடுக்கல்லூர், கொண்டாநகரம், சுத்தமல்லி உள்ளிட்ட பகுதிகளில் கொட்டிச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக சுத்தமல்லி போலீசாருக்கு புகார்கள் வந்தன. இந்த பிரச்சினை பூதாகரமாக வெடித்ததை தொடர்ந்து சுத்தமல்லி போலீசார் 6 வழக்குகளை பதிவு செய்துள்ளனர். ஏற்கனவே நெல்லையைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், கழிவுகளை கொண்டு வந்து கொட்டிய லாரியின் உரிமையாளர் மற்றும் கேரளாவைச் சேர்ந்த தனியார் கழிவு மேலாண்மை நிறுவனத்தின் சூப்பர்வைசர் இருவரும் கைது செய்யப்பட்டனர். இதனிடையே பசுமை தீர்ப்பாயம், மருத்துவ கழிவுகளை கேரள மாநில அரசே அப்புறப்படுத்த உத்தரவிட்டது.



இதையடுத்து கேரளா மாநில மாசுகட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு நடத்தினர். இந்த சூழலில் கொட்டப்பட்ட மருத்துவ கழிவுகளை அகற்றுவதற்காக திருவனந்தபுரம் உதவி கலெக்டர் தலைமையில் 30 பேர் கொண்ட குழு கேரளாவில் இருந்து இன்று நெல்லை வந்திருந்தனர். தொடர்ந்து தமிழக மாசுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன், கேரளமாசுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். இந்நிலையில் நெல்லை மாவட்டத்தில் கொட்டப்பட்டுள்ள கேரள கழிவுகளை அகற்றும் பணி முழுவீச்சில் தொடங்கி உள்ளது. கேரளாவில் இருந்து வந்த 30 பேர் கொண்ட குழு தற்போது 6 குழுக்களாக பிரிந்து குப்பைகளை அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி நெல்லை பகுதியில் கொட்டப்பட்ட கேரள மருத்துவக் கழிவுகள், லாரிகளில் மீண்டும் ஏற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கழிவுகளை அகற்றும் பணியை ஆய்வு செய்த பின் நெல்லை மாவட்ட கலெக்டர் கார்த்திகேயன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது ,

நெல்லையில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது . தமிழக அரசின் தொடர் நடவடிக்கைகளால் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது . நெல்லையில் கழிவுகளை கொட்டிய விவகாரத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் . இனி இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் .

கழிவுகளை அப்புறப்படுத்த கூடுதல் லாரிகள் தேவைப்பட்டால் அதனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என தெரிவித்தார் .

# பிரதமரை எதிர்க்கும் துணிவு எடப்பாடி பழனிசாமிக்கு இருக்கிறதா? மு.க.ஸ்டாலின் சரமாரி கேள்வி

சென்னை , டிச.24

திமுக செயற்குழு கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறித்து விமர்சித்து பேசிய முதல்அமைச்சர் மு . க . ஸ் டா லின் கூறியதாவது , டங்ஸ்டன் சுரங்க அனுமதிக்கு எதிராக பாஜகவை கண்டித்தாரா எடப்பாடி பழனிசாமி? புரட்சியாளர் அம்பேத்கரை கொச்சைப் படுத்தி பேசிய உள்துறை மந்திரி அமித்ஷாவுக்கு எதிராகசீச்சுக்குரலிலாவது கத்தினாரா? . பிரதமர் மோடியை எதிர்த்துப் பேசுகிற துணிவு எடப்பாடி பழனிசாமிக்கு இருக்கிறதா?. 2019ல் 20 தொகுதிகளில் போட்டியிட்டு 19.4%, 2024ல் 34 தொகுதிகளில் போட்டியிட்டு 20.4% வாக்குகளும் அதிமுக பெற்றுள்ளது .அதிமுக, 2019ஐ விட, 2024 நாடாளுமன்ற தேர்தலில் 12.58 விழுக்காடு வாக்குகள்குறைவாக பெற்றுள்ளது அதிமுக தொண்டர்களுக்கு சாதாரண கூட்டல் வகுத்தல் கணக்கே தெரியாது என்று நம்பி பொய்க்கணக்கை அவிழ்த்துவிட்டுள்ளார் . எடப்பாடி பழனிசாமி சொன்ன கணக்கை அடிப்படை அறிவுள்ள அதிமுகவினரே நம்ப மாட்டார்கள். என தெரிவித்தார் .

# 2026 தேர்தலில் 200 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெறுவோம்: உதயநிதி ஸ்டாலின்


சென்னை, டிச.24

தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு . க . ஸ் டா லின் தலைமையில் சென்னை அண்ணாஅறிவாலயத்தில் தி.மு.க. செயற்குழு கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில் கட்சியின் மூத்த நிர்வாகிகள், அமைச்சர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏ.க்கள், மாவட்டச்செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், அணி நிர்வாகிகள் என 850க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

செயற்குழுக் கூட்டத்தில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

முதல் அமைச்சர் தலைமையில் எந்த தேர்தலிலும் தோற்கவில்லை. 2024 தேர்தலில் 221 தொகுதிகளில் திமுக கூட்டணிதான் முதலிடம். நம் கூட்டணி நாளுக்கு நாள் வலுவாகிக் கொண்டிருக்கிறது. சமூக வலைதளங்களில் திமுகவை பலப்படுத்த வேண்டும். ஒவ்வொரு அணியும் வெற்றிக்காக பாடுபட வேண்டும். திமுகவுக்குமகளிர்ஆதரவு அபரிமிதமாகஇருக்கிறது. 2026ல் நாம் பெறும் வெற்றிதமிழ்நாட்டுக்கான வெற்றி மட்டுமில்லை; இந்தியாவுக்கான வெற்றி. 200 தொகுதிகளில் இல்லை, 200க்கும் மேல் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

## சலார் 2 எனது சிறந்த படைப்பாக இருக்கும் கே.ஜி.எப் இயக்குநர்




பிரபாஸ் 'பாகுபலி 2' படத்திற்கு பிறகு தொடர்ச்சியாக மூன்று படதோல்விகளை சந்தித்தார். இதையடுத்து, கே.ஜி.எப் புகழ் இயக்குநர் பிரசாந்த் நீலுடன் இணைந்து 'சலார் 1' படத்தில் நடித்தார். இந்தப் படம் பிளாக் பஸ்டர் ஹிட் ஆனது. இது பிரபாஸை மீண்டும் வெற்றி நாயகனாக மாற்றியது.

இந்நிலையில்,சலார்படம்வெளியாகிசரியாகஒருவருடம்நிறைவடைந்த நிலையில், இப்படத்தின் இயக்குநர் பிரசாந்த் நீல் சிறப்பு பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில் தனது படங்கள் குறித்த பல தகவல்களை அவர் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில், "'சலார் 1' பாக்ஸ் ஆபிஸில் வெற்றிப் படமாக இருந்தாலும் அது எனக்கு ஏமாற்றத்தை தான் அளித்தது. அந்தப் படத்தில் நிறைய கடின உழைப்பை வழங்கி இருந்ததால், இன்னும் அதிகமான வரவேற்பை பெற்றிருக்கலாம். அதனால், சலார் முதல் பாகத்தால் நான் முழுமையான சந்தோஷத்தை அடைய முடியவில்லை. கே.ஜி.எப் 2 கொடுத்த வெற்றியால் இந்தப் படத்தை சரியாக எடுக்காமல் விட்டுவிட்டேனோ என்ற சந்தேகம் அடிக்கடி என்னுள் எழுகிறது. இதனால் சலார் 2 படத்தை எனது சிறந்த திரைப்படங்களில் ஒன்றாக மாற்ற முடிவு செய்துள்ளேன். படத்தில் நான் எழுதிய கதைகளும் வசனங்கலும் அனேகமாக எனது சிறந்த படைப்பில் ஒன்றாக இருக்கும். நான் கற்பனை செய்வதை விடவும், பார்வையாளர்கள் கற்பனை செய்வதை விடவும் நான் அதை பெரிதாக உருவாக்கப் போகிறேன். இது சந்தேகத்திற்கு இடமின்றி எனது சிறந்த படைப்புகளில் ஒன்றாக இருக்கும்" என்று நம்பிக்கையாக கூறினார்.

இந்நிலையில், சலார் திரைப்படம் ஒரு வருடத்தை நிறைவு செய்ததை பிரபாஸ் ரசிகர்கள் பண்டிகையாக நினைத்து கொண்டாடி வருகின்றனர், சமூக வலைதளங்களில் ரசிகர்கள் மற்றும் நெட்டிசன்கள் பலரும் படத்தை பற்றிய வீடியோக்களையும் புகைப்படங்களையும் படம் குறித்த அவர்களது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இதனால் சலார் இன்று எக்ஸ் தளத்தில் டிரெண்டிங்கில் உள்ளது.

சலார் திரைப்படம் தெலுங்கு மட்டுமல்லாமல் தமிழ், ஹிந்தி மொழிகளிலும் சலார் தனது ஆதிக்கத்தை செலுத்தி உலகளவில் சுமார் 700 கோடி ரூபாய் வசூலைக் குவித்தது. இந்தப் படத்தில் பிரபாஸுடன், பிருத்விராஜ் சுகுமாரன் சலார் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தார்.சுருதிஹாசன், ஜெகபதி பாபு, பாபி சிம்ஹா, ஈஸ்வரி ராவ், ஸ்ரேயா ரெட்டி மற்றும் டின்னு ஆனந்த் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்தனர்.

## நடிகர் ஜெய் நடித்த 'பேபி & பேபி' திரைப்படத்தின் டீசர் வெளியீடு




தமிழ் சினிமாவில் 'சுப்பிரமணியபுரம்', 'எங்கேயும் எப்போதும்' ஆகிய படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்றவர் நடிகர் ஜெய். இவர் தற்போது 'பேபி & பேபி' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் ஜெய் உடன் சத்யராஜ் மற்றும் யோகி பாபு நடித்துள்ளனர். இப்படத்தை அறிமுக இயக்குநர் பிரதாப் இயக்கியுள்ளார். அழகான பேமிலி எண்டர்டெயினராக இப்படம் உருவாகி உள்ளது. தமிழ் சினிமாவில் ரசிகர்கள் குடும்பங்களோடு இணைந்து ரசிக்கும் படங்கள் வருவதுஅரிதாகிவிட்டது.அந்தவகையில், குடும்ப உறவுகளின் பின்னணியில், குழந்தைகளை மையப்படுத்தி, அனைத்து தரப்பினரும் கொண்டாடும்வகையில்இப்படத்தின்திரைக்கதை உருவாக்கப்பட்டுள்ளது.

காமெடியும், எமோஷனும் சம அளவில் கலந்து ஒரு அசத்தலான பேமிலி எண்டர்டெயினராக இப்படத்தை உருவாக்கி வருகிறார், அறிமுக இயக்குநர் பிரதாப். இப்படத்தில் ஜெய் நாயகனாக நடிக்க, நடிகர் சத்யராஜ் திருப்புமுனை பாத்திரத்திலும், யோகி பாபு மிக முக்கிய பாத்திரத்திலும் நடிப்பதாக கூறப்படுகிறது.

நாளைய தீர்ப்பு படத்தில், விஜய்யின் முதல் கதாநாயகியாகவும் மற்றும் பவித்ரா படத்தில் அஜித்தின் ஜோடியாகவும் நடித்த, நடிகை கீர்த்தனா இப்படத்தில் ஜெய்யின் அம்மாவாகவும், நடிகர் சத்யராஜுக்கு ஜோடியாகவும் நடித்து, மீண்டும் திரையில் களமிறங்கி உள்ளார். நடிகை பிரக்யா நாக்ரா ஜெய்யின் ஜோடியாக நடிக்கிறார்.

இவர்களுடன் ஆனந்தராஜ், ஸ்ரீமன், மொட்டை ராஜேந்திரன், ரெடின் கிங்ஸ்லி, இளவரசு, சிங்கம்புலி, நிழல்கள் ரவி, கே.பி.ஒய்.ராமர், கே.பி.ஒய்.தங்கதுரை, ஆர்.ஜே.விக்னேஷ்காந்த், சேசு ஆகியோர் இணைந்து நடிக்கின்றார்கள். மற்றொரு நாயகியாக புதுமுகம் சாய் தன்யா நடிக்கின்றனர். இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு பொள்ளாச்சி மற்றும் பாலக்காடு பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ள நிலையில், இதன் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு சென்னை சுற்று வட்டார பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் படமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. மேலும் டிரெய்லர் விரைவில் வெளியாக இருக்கிறது.

## புரோ கபடி லீக்; பெங்களூரு அணியை வீழ்த்தி தமிழ் தலைவாஸ் வெற்றி

12 அணிகள் இடையிலான 11வது புரோ கபடி லீக் போட்டி கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்திலும், 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவிலும் நடைபெற்று முடிந்தன. இந்த தொடரின் 3வது கட்ட லீக் ஆட்டங்கள் தற்போது புனேவில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் இன்று இரவு 8 மணிக்கு தொடங்கிய ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் பெங்களூரு புல்ஸ் அணிகள் மோதின .

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய தமிழ் தலைவாஸ் ஆட்ட நேர முடிவில் 4232என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

## ஐ.பி.எல்.2025: துருவ் ஜூரெலுக்கு இதை செய்ய உள்ளேன் சாம்சன் நெகிழ்ச்சி அறிவிப்பு




இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணிக்காக அறிமுகமாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தவர் இளம் இந்திய விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் துருவ் ஜூரெல். அந்த தொடரின் 4வது போட்டியில் இக்கட்டான சூழ்நிலையில் சிறப்பாக பேட்டிங் செய்து இந்தியாவை வெற்றி பெற வைத்து ஆட்டநாயகன் விருது வென்றார்.

இவரது ஆட்டத்தை பார்த்து வியந்த சுனில் கவாஸ்கர், அடுத்த எம்.எஸ். தோனி உருவாகி வருவதாக பாராட்டு தெரிவித்தார். தற்போது நடைபெற்று வரும் பார்டர் கவாஸ்கர் தொடரிலும் அணியில் இடம்பிடித்துள்ளார்.

இவர்ஐ.பி.எல். தொடரில் சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் இடம்பெற்றுள்ளார். சாம்சன் விக்கெட் கீப்பராக இருப்பதால துருவ் அணியில் வெறும் பேட்ஸ்மேனாக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் 2025 ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணியில் தனது விக்கெட் கீப்பிங் இடத்தை துருவ் ஜூரெலுடன் பகிர்ந்து கொள்ள உள்ளதாக சஞ்சு சாம்சன் தெரிவித்துள்ளார். இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் துருவ் ஜூரெலை வருங்கால விக்கெட் கீப்பராக உருவாக்க முயற்சித்து வருகிறது.

அந்த வாய்ப்பைப் பிடிப்பதற்காக 2025 ஐபிஎல் தொடரில் அவருக்கு விக்கெட் கீப்பிங் பொறுப்பை கொடுக்க உள்ளதாக ராஜஸ்தான் அணியின் கேப்டன் சாம்சன் நெகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து சாம்சன் பேசியது பின்வருமாறு: "நாங்கள் வீரர்களுக்காகவும் உணர்வோம். துருவ் ஜூரெல் தற்சமயத்தில் டெஸ்ட் விக்கெட் கீப்பராக தனது கெரியரில் இருக்கிறார். அதனால் ஐபிஎல் தொடரிலும் அவர் ஏதோ ஒரு தருணத்தில் விக்கெட் கீப்பிங் செய்ய வேண்டும். அதை நாங்கள் விவாதித்தோம். எனவே நாங்கள் விக்கெட் கீப்பிங்கை பகிர்ந்து கொள்ள உள்ளோம். நானும் ஒரு சாதாரண பீல்டராக அதிகம் கேப்டன்ஷிப் செய்ததில்லை.

எனவே உங்களுடைய நிலைமையை புரிந்து கொண்ட கேப்டன் என்ற முறையில் நீங்கள் சில போட்டிகளில் விக்கெட் கீப்பிங் செய்வதை நான் விரும்புகிறேன் என்று அவரிடம் கூறியுள்ளேன். இந்த முடிவு எப்படி செல்கிறது என்பதை பார்க்க வேண்டும். கண்டிப்பாக அது அணிக்கு பாதிப்பை கொடுக்காது. எப்போதும் எங்களுக்கு அணியே முக்கியம்" என்று கூறினார்.

## ஐ.எஸ்.எல். கால்பந்து ; முகமதின் அணியை வீழ்த்தி கேரளா பிளாஸ்டர்ஸ் வெற்றி




13 அணிகள் இடையிலான 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்நிலையில், இந்த தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு கொச்சியில் தொடங்கிய ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் முகமதின் எஸ்.சி. அணிகள் மோதின .

இந்த ஆட்டத்தில், தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடி ஆதிக்கம் செலுத்திய கேரளா அணி 30 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.